குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
எஸ்.டி.சி.எண்.2555/2024

அ.சா. 2

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் 04–ம் தேதி திங்கள்கிழைமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபா | தொழில் | |
| கணவர் பெயர் | தங்கராஜ் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.17 மணி,

Accused Selvakumar present. Advocate Mr.Jagadeesan present for accused. APP Mr. M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் புதுக்கடையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனக்கு தெரியும். கடந்த 16.11.2021 ஆம் தேதி புதுக்கடையில் இருந்து காமலாபுரம் செல்லும் சாலையில் நானும், சௌமியா மற்றும் சந்திரா ஆகியோர்கள் சேர்ந்து நடைபயிற்சிக்காக சென்றுவிட்டு, திரும்பி புதுக்கடை நோக்கி வந்து கொண்டிருந்தபோது, கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தம் அருகே மூவரும் நடந்து வந்து கொண்டிருந்தபோது, எனக்கு முன்பாக சந்திரா சென்றார், அவருக்கு பின்னால் சௌமியா, அவர்கள் இருவருக்கு பின்னால் நான் நடந்து சென்றேன். நாங்கள் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தோம்.

2. அப்போது எங்களுக்கு பின்னால் வந்த தடம் எண்.63 என்ற அரசு பேருந்து, வந்து எங்கள் மீது மோதிவிட்டது. விபத்து நடந்தபோது, காலை 05.30 மணி இருக்கும். எனக்கு பின் தலை, முதுகு, மார்பு எலும்பு, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. சௌமியாவிற்கு இடுப்பு, முழங்கால் மற்றும் உள்காயம் ஏற்பட்டது. சந்திராவிற்கு காயம் எதுவும் இல்லை.

3. விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தின் பதிவெண் தற்போது எனக்கு நினைவில்லை. ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய பேருந்தை சம்பவத்தின்போது

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:53:30 +0530

ஓட்டி வந்தார். அருகிலிருந்தவர்கள் எனது கணவருக்கு தகவல் சொன்னார்கள். அவர் வந்து என்னை காரில் அழைத்து சென்று பிரணவ் மருத்துவமனையில் சேர்த்தார்.

4. சௌமியா முதலில் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அதன்பின்பு, சேலம் கோகுலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். நான் 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

5. நாங்கள் பொதுவாக காலை 05.30 மணிக்கு நடைபயிற்சிக்கு செல்வோம். என்னுடன் சௌமியா, சந்திரா மற்றும் பலர் நடைபயிற்சிக்கு வருவார்கள். ஆனால் சம்பவத்தன்று நாங்கள் மூவர் மட்டும் தான் நடைபயிற்சிக்கு சென்றிருந்தோம். சம்பவத்தன்று கார்த்திகை மாதம் 1 ஆம் தேதி என்பதால் குளிர் அதிகமாக இருந்தது என்றால் சரி.

6. நாங்கள் புதுக்கடையில் நடைபயிற்சியை துவங்கி, கட்டிக்காரனூர் மேடு வரை நடந்து செல்வோம். புதுக்கடையில் இருந்து கட்டிக்காரனூர் மேடு சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். கட்டிக்காரனூரிலிருந்து புதுக்கடைக்கு திரும்பி வரும்போது, நாங்கள் மூவர் தான் ஒன்றாக வந்தோம். மற்ற நடைபயிற்சியாளர்கள் எங்கள் முன் சென்றுவிட்டார்கள். கட்டிக்காரனூர் மேட்டிலிருந்து, கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தத்திற்கு வருவதற்கு சுமார் 5 நிமிடம் ஆகும்.

7. சம்பவ இடம் தார்சாலை என்றால் சரி. சம்பவ இடத்தில் வேகத்தடை இல்லை. கட்டிக்காரனூர் மேட்டிலிருந்து, கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தம் தாழ்வான பகுதி என்றால் சரி. சம்பவ இடம் போக்குவரத்து மிகுந்த பகுதி என்றால் சரி. மேற்படி சாலையில் நடைபயிற்சி செய்வதற்கான இடத்தை விட்டுவிட்டு, ரோட்டில் நடந்து சென்றோம் என்றால் சரியல்ல.

8. நாங்கள் சம்பவத்தின்போது மண் ரோட்டில் செல்லவில்லை என்றாலும், காமலாபுரம் செல்லும் தார் சாலையில் தான் நடந்து சென்றோம் என்றாலும், எங்களுடைய அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:53:35 +0530

போலிசார் விசாரணையின் போது, எதிரியின் பெயர் விபரம் நான் சொல்லவில்லை என்றால் சரி. அப்போது, எனக்கு எதிரியின் பெயர் தெரியவில்லை.

9. சம்பவத்தின்போது, எதிரி கவனமாக தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றாலும், அவர் ஹாரன் அடித்தபோது, நாங்கள் ஒதுங்கி செல்லாமல், அஜாக்கிரதையாக ரோட்டில் நடந்து சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி ஹாரன் அடித்தபோது, நாங்கள் ஓரமாக சென்றுவிட்டோம்.

10. போலிசார் நாங்கள் மருத்துவமனையில் இருந்தபோது விசாரித்தார்கள். இன்று காலை நான் 11.00 மணிக்கு நீதிமன்றத்திற்கு வந்தேன். இவ்வழக்கு தொடர்பாக எனக்கு எந்த போலிசார் சாட்சியம் சொல்லிக்கொடுத்தார்கள் என்றால், யாரும் எனக்கு சொல்லிக்கொடுக்கவில்லை. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது என்றால் சரி. அதை போலிசார் என்னிடம் நேற்று கொடுத்தார்கள்.

11. என்னுடன் சம்பவத்தின்போது நடைபயிற்சிக்கு வந்த சந்திராவிற்கு காயம் ஏதும் ஏற்படவில்லை என்றால் சரி. கீழே விழுந்தார் ஆனால் காயம் ஏதும் ஏற்படவில்லை. அவர் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. உடல்வலிக்கு மட்டும் பக்கத்தில் உள்ள கிளினிக்கில் ஊசி போட்டுக்கொண்டார்.

12. சந்திரா பக்கத்தில் உள்ள கிளினிக்கில் ஊசி போட்டுக்கொண்டதாக போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றாலும், தற்போது நான் புதிததாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.37 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:53:39 +0530